**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்:** திருவரங்கம் கோவிலைப் பற்றி, அதற்கு உதவி செய்யவேண்டும் என்று அந்தக் கோவில் திருப்பணிக் குழுவினர் யுனெஸ்கோவைக் கேட்டுக் கொண்டார்கள். யுனெஸ்கோ ஸ்தாபனம் அதற்குப் பன்னிரண்டாயிரம் டாலர் உதவியளிக்க முன்வந்திருக்கிறது. ஆர்க்கியாலஜி, சிற்பக்கலை, மற்றவைகளைப்பற்றி ஆராய்வதற்கு யுனெஸ்கோவைச் சார்ந்த நிபுணர் அதுபற்றி ஆராய வந்தாரே தவிர, நமக்கு யோசனை சொல்லுவதற்கோ மற்றதற்கோ அல்ல. அது உள்ளபடியே சிற்பக்கலை நிறைந்த கோவில்தானு, அந்த சிற்பக்கலைக்கு உதவி செய்ய வேண்டியது யுனெஸ்கோவின் இன்றியமையாத தன்மைதானு என்பதையெல்லாம் யுனெஸ்கோவின் சார்பில் ஆராய்ந்து, யுனெஸ்கோவிற்கு யோசனை சொல்ல அந்த அதிகாரி வந்தாரே தவிர, அந்தக் கோவிலின் சிற்பக் கலை எப்படி இருக்க வேண்டும் என்று நமக்கு யோசனை சொல்ல அந்த அதிகாரி வரவில்லை.

**திரு. ரா. ராமச்சந்திர துரை:** தலைவர் அவர்களே, பெரிய கோவில்களிலெல்லாம் மடைப்பள்ளி என்ற பெயரில் சமையல் அறை இருக்கிறது. சமையல் அறை இருக்கும் கோவில்களில் ‘லெட்ரின்’ கட்டாததன் காரணம் என்ன?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்:** இதெல்லாம் சமயச் சார்புடைய தலைவர்கள் பதிலுரைக்க வேண்டிய கேள்வி.

### திரு. கள்ளழகர் தேவஸ்தனம்.

* 215. வினு.—**திரு. கரு. சீமைச்சாமி:** மதிப்பிற்குரிய கல்வி-தொழில் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா :

(அ) அழகர்கோவில், ஸ்ரீ கள்ளழகர் தேவஸ்தான தர்ம கர்த்தாக்குழு தலைவர் தேர்தல் 29—3—1967-ல் நடக்க இருந்ததை மதுரை அறநிலைய டெபுடி கமிஷனர் அவர்கள் நிறுத்தி வைத்திருப்பது உண்மையா?

(இ) ஆம் என்றால் அதன் விபரம் என்ன?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்:** (அ) & (இ) அழகர் கோவில், கள்ளழகர் தேவஸ்தான அறங்காவலர் தலைவரைத் தேர்ந்தெடுப்பதற்காக, அறங்காவலர் மன்றம் திட்டமிட்டபடி 29—3—1967 அன்று கூடியது. மேற்படி கூட்டத்தின்போது, திரு. பி. அருணசலம் அவர்கள் தலைவராக மறுமுறையும் தேர்ந்தெடுக்கப்பட்டார். எனினும், மேற்சொன்ன கூட்டம் விதிமுறைகளுக்கிணங்க நடத்தப்படவில்லை எனக்குறிப்பிட்டு, மதுரையிலுள்ள இந்து சமய அறக்கட்டளைகள் நிர்வாகத்துறை துணைக் கமிஷனரிடமிருந்து அறிக்கை வந்ததால், திரு. பி. அருணசலம் அவர்களைத் தேர்ந்தெடுத்த தீர்மானம் செயலுக்கு வருவதைச் சென்னையிலுள்ள இந்து சமய அறக்கட்டளைகள் நிர்வாகத்துறை

1967 ஜுலை 9]

கமிஷனர் நிறுத்திவைத்துள்ளார். இது இப்போது சென்னையிலுள்ள இந்து சமய அறக்கட்டளைகள் கமிஷனரின் முன் முடிவு பெறுமலிருக்கிறது.

**டாக்டர் எச். வி. ஹாண்டே:** அழகர்கோயில், கள்ளழகர் தேவஸ்தான அறங்காவலர் தலைவர் தேர்தல் முறைப்படி நடக்கவில்லை என்று சொன்னார்கள். அதனுடைய விவரம் அமைச்சர் அவர்கள் சொல்ல முடியுமா? இதற்கான மறுதேர்தல் எப்பொழுது நடைபெறும் என்று சொல்ல முடியுமா?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்:** தலைவர் அவர்களே, 29—3—1967-அன்று தருமகர்த்தாவைத் தேர்ந்தெடுப்பதற்காக அறங்காவலர் மன்றம் கூட்டப்பட்டது. மற்ற தருமகர்த்தாக்களுக்கு ஒரு வார காலத்திற்கு முன்பாகவே கூட்டம் பற்றி அறிவிப்பு செய்யவேண்டும் என்பது முறை. அதன்படி யாருக்குமே அறிவிப்பு செய்யாமல் கூட்டம் நடைபெற்றிருக்கிறது. தர்மகர்த்தாக் குழுவினைச் சேர்ந்த ஒருவர், தங்களுக்கு அறிவிக்கப்படவில்லை, நோட்டீஸ் கொடுக்கப்படவில்லை, பத்திரிகையிலிருந்து முடிவைத் தெரிந்து கொள்ளவேண்டியிருந்தது என்று விண்ணப்பித்துக்கொண்டார். அதுபற்றி ஆராயப்பட்டு, முறைப்படி தேர்தல் நடக்கவில்லை என்ற காரணத்தால் நிறுத்தி வைக்கப்பட்டது.

*Teachers of Valliyoor Panchayat Union*

* 216 Q.—THIRU M. S. SIVASAMI: Will the Hon. the Minister for Education and Industries be pleased to state:

(*a*) whether it is a fact that the teachers of Valliyoor Panchayat Union have not been paid their salary from 21st January to 20th February 1967; and

(*b*) if so, the action taken thereon?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்:** (அ) ஆம்.

(இ) 31—3—1967 தேதியோடு முடிவடையும் கால அளவிற் குரிய சிறப்பு அகவிலைப்படி மானியம் சாதாரணமாய் 1967 மே திங்களில்தான் வழங்கப்படும். ஆனால், தனிப்பட்ட முறையில் முன் கூட்டியே இதற்கு ஒப்பளிப்பு வழங்கப்பட்டு. ஆசிரியர்களின் சம்பளங்களும் இப்போது கொடுக்கப்பட்டுவிட்டன. மு.ப. 10—00

**திரு. மு. ச. சிவசாமி:** மாதம் முடிந்தவுடன், ஒவ்வொரு ஆசிரியர்களுக்கும் சம்பளம் பட்டுவாடா செய்யாத எல்லா பஞ்சாயத்து யூனியன்களுக்கும் அரசாங்கம் கடுமையான உத்திர விடுமா?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்:** ஏறத்தாழ முதல் தேதியன்றே அந்தச் சம்பளங்கள் ஆசிரியர்களுக்கு வழங்கப்படவேண்டுமென்று உத்திரவை ஏற்கெனவே அரசு அனுப்பியிருக்